**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**சி.எம்.பி. எண். 35/2026**

**in**

**குற்ற எண். 113 /2025**

குணசேகர்,
த/பெ.சுப்பிரமணி,
க.எண்.5/408,
மல்குத்திபுரம் தோப்பு,
தெகனகிரி,
தாளவாடி, ....மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

உதவி காவல்துறை ஆய்வாளர்,
தாளவாடி காவல் நிலையம்,
குற்ற எண்.113/2025 ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/வாகன உரிமையாளர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்நீதிமன்றம் கடந்த 04.02.2026 ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துள்ளது. மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மாதேஸா,பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும் இம்மனு எதிருரை இவ்வழக்கு கட்டு ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் இம்மனுவானது குற்ற எண். 113/2025 ன் கீழ் தாளவாடி காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட மனுதாரர்/வாகன உரிமையாளருக்கு சொந்தமான TN 36 X 5532 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus இரு சக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு மனுதாரர்/வாகன உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க

உத்தரவிடவேண்டி பிரிவு 497 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டது.

**2.மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மறைந்த மனுதாரரின் தந்தை சுப்பிரமணி அவர்களே மேற்படி சொத்தின் உரிமையாளர் என்பதையும். மனுதாரரின் தந்தை சுப்பிரமணி அவர்கள் 12.12.2019 அன்று காலமானார் என்றும், மனுதாரது தாயார் ராணி, மனுதாரரது சகோதரி கோகிலா மற்றும் மனுதாரர் ஆகியோரே அவரது சட்டபூர்வமான வாரிசுதாரர்கள் என்றும், மேற்கூறிய வழக்கு தொடர்பாக, எதிர் மனுதாரரான காவல்துறை தரப்பினர், 'TNG Act –ன்' பிரிவு 12–இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக, குற்ற எண் 113/2025–இன் கீழ் எதிரிகள் மீது வழக்கை பதிவு செய்துள்ளனர் என்றும், மேலும் நான் சமர்ப்பிப்பதாவது: 11.10.2025 தேதியிட்ட குற்ற எண் 113/2025–இல், எதிர் தரப்பு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட TN 36 X 5532 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர் என்றும். மேலும், மனுதாரர் தனது குடும்பத்தின் ஒரே வருவாய் ஈட்டுபவன் என்பதாலும், மனுதாரரது முழு குடும்பமும் மனுதாரரின் வருமானத்தையே முழுமையாகச் சார்ந்திருக்கிறது என்பதாலும், மேலும் மனுதாரர் சமர்ப்பிப்பதாவது மனுதாரரது பணி நிமித்தமான பயணங்களுக்கு, இந்த இருசக்கர வாகனத்தை மட்டுமே மனுதாரர் பயன்படுத்த சார்ந்து இருப்பதாகவும், மனுதாரரின் இருசக்கர வாகனம் காவல்துறையின் காவலில் இருப்பதால், மனுதாரரால் அவரது வழக்கமான பணிகளுக்குச் செல்ல இயலவில்லை என்றும், இதனால் மனுதாரர் மிகுந்த இழப்பிற்கும் இன்னலுக்கும் ஆளாகியுள்ளதாகவும் மேலும் மனுதாரர் தெரிவிப்பதாவது இந்த வாகனத்தின் அசல் பதிவுச் சான்றிதழ் (RC Book) மனுதாரரின் தந்தையின் பெயரில் உள்ளது என்றும், TN 36 X 5532 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus இருசக்கர வாகனம் மனுதாரரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் பட்சத்தில், இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் விதிக்கப்படும் எத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட மனுதாரர் ஒப்புக்கொள்வதாகவும். இந்தச் சொத்தின் மதிப்பு ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) என்றும், மேலும் மனுதாரர் சமர்ப்பிப்பதாவது அதுமட்டுமின்றி, குற்ற எண் 113/2025 தொடர்பான வழக்கு முழுமையாக முடித்துவைக்கப்படும் வரை, TN 36 X 5532 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda

Splendor Plus வாகனத்தை மனுதாரர் விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ அல்லது அதன் தோற்றத்தையோ அமைப்பையோ மாற்றியமைக்கவோ மாட்டேன் என்று மனுதாரர் உறுதியளிப்பதாகவும், எனவே, இந்த நீதிமன்றத்தின் ஆவணப் பதிவேட்டில் உள்ள, ஈரோடு மாவட்டம், தாளவாடி காவல் நிலையத்தின் குற்ற எண் 113/2025-இல் , எதிர் தரப்பு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட TN 36 X 5532 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை மனுதாரரிடம் திரும்ப ஒப்படைக்குமாறு மனுதாரர்/வாகன உரிமையாளர் இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3.எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேற்படி வழக்கில் TN 36 X 5532 கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை குற்றம் நடந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது என்றும், வழக்கு சொத்தை ஒப்படைத்தால் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடுத்தக்கூடும் என்பதால் இம்மனுவினை அனுமதிக்க ஆட்சேபணை செய்யப்படுகிறது என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.தீர்வு**

மனு ஆவணங்கள், அரசு தரப்பு எதிருரை மற்றும் மனுதாரர் தரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு PR No.172/2026 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தான் சொத்தின் உரிமையாளர் என்றும் அதற்கான ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுச்சொத்தான மேற்படி வாகனத்தை பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்திருப்பதால் ஏற்படும் இழப்பை கருத்தில் கொண்டும் **"Suderbhai Ambalal Desai Vs State of Gujarat 2002 Supp (3) SCR 39"** என்ற வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள மேற்கோள்களை கருத்தில் கொள்ளப்படுகிறது. மேலும், வாகனத்தின் அசல் ஆர்.சி புத்தகம் மனுதாரரின் தந்தையின் பெயரில் உள்ளதாலும், வாகன உரிமையாளர் இறந்து போனதாலும், மேலும் இந்த வாகனத்தை மனுதாரருக்கு கொடுப்பதால் உரிமையாளரின் பிற

வாரிசுதாரர்களுக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றும் மனுதாரர் தரப்பில் நோட்டரி அபிடேவிட் தாக்கல் செய்யப்பட்டதை கருத்தில் கொண்டும், மேற்படி மனுசொத்தான TN 36 X 5532 கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரர் வசம் இடைக்காலமாக கொடுப்பது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1. மனுதாரர் மனுச்சொத்திற்காக தானும் தனக்காக ஒரு நபர் ரூ.70,000/- பிணைமுறி இயற்றிக் கொடுக்க வேண்டும்.

2. மனுச்சொத்தினை நான்கு கோணங்களிலும் கலர் போட்டோ எடுத்து அதில் மனுதாரர் கையொப்பமிட்டு அதனை சிடி மற்றும் பாரதிய சாக்ஷிய அதினியம் சட்டம் பிரிவு 63 படி சான்றிதழுடன் தாக்கல் செய்ய வேண்டும்

3. மேலும் வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் செய்யவோ மற்றும் எந்தவித வில்லங்க பாராதீனம் செய்யவோ கூடாது.

4. மேலும் மனுதாரர் வாகனத்தின் ஆர்,சி புத்தகத்தின் அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்ட நகலை இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவேண்டும்.

5. தலைமை எழுத்தர் அதன் நகலை பெற்று அசலுடன் சரிபார்த்து வழக்கு கட்டினுல் வைக்க வேண்டும், அசலை மனுதாரர் வசம் திரும்ப அளித்துவிட்டு அதற்கான ஆதரவை மனுதாரரிடம் இருந்து பெற வேண்டும்.

6. தலைமை எழுத்தர் பஞ்சநாமா தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்

7. நீதிமன்ற விசாரணைக்கு வேண்டும் பொழுது மேற்படி மனுச்சொத்தினை ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. மேற்படி நிபந்தனைகளை கடைபிடிப்பதாக உறுதி மொழி பத்திரம் எழுதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.04.07 17:32:33 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.